*2018 ஜூன் 28]* [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*பழமையான மொழிகளுள் மூத்த மொழியாகக் கருதப்படும் நம் தமிழ் மொழியிலும் அத்தகைய தொகுப்பு தேவை என்பதை உணர்ந்து, "சொற்குவை" என்ற திட்டம் தொடங்கப்படும். இதில் தமிழில் உள்ள சொற்கள் அனைத்தையும் தொகுத்து நிரல்படுத்துதல், சொற்களின் இலக்கண வகைப்பாடுகளைப் பதிவு செய்தல், நிகரான சொற்களைப் பதிவு செய்தல், சொற்களின் தொடராக்கப் பரிமாணங்களைப் பதிவு செய்தல், சொற்களுக்கான பொருள் விளக்கத்தைத் தேடும் வசதியை அமைத்துக் கொடுத்தல், அடிக்கடி தேடப்படும் சொற்களுக்கு வண்ண அடையாளம் கொடுத்தல், வந்த சொல்லே மீளவும் வராமல் தடுத்தல் மற்றும் புதிய சொற்களைப் பதிவு செய்தல் போன்ற வசதிகள் உருவாக்கப்பட்டு, அவை இணையதளப் பொது வெளியில் உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், மொழியியல் ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்படும். இதற்கென ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*5. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுகலை தமிழ் (எம்.ஏ.) பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இவ்வாண்டு முதல், ஆண்டுதோறும் தெரிவின் அடிப்படையில், முதலாம் ஆண்டு பயிலும் 15 மாணவர்கள், இரண்டாம் ஆண்டு பயிலும் 15 மாணவர்கள் என மொத்தம் 30 மாணவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித் தொகையாக தலா 2,000/– ரூபாய் வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ஆண்டுக்கு 7,20,000/– ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## (ஆ) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுதல், கிராமப்புற மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை குறித்த கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 28

*1. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பக்தர்கள் வசதிக்காக, பக்தர்கள் தங்கும் விடுதி 30 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*2. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிதி வசதி இல்லாத 1,000 கிராமப்புறத் திருக்கோயில்களில், நடப்பாண்டில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள, திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 10 கோடி ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*3. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,000 திருக்கோயில்களில் நடப்பாண்டில் திருப்பணிகள் மேற்கொள்ள, திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## (இ) வேலூர் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்தல், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்துதல், காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி வளாகம் அமைத்தல் மற்றும் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இறகுப் பந்து அகாடமி அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. உடற்கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டும், உடற்திறனை வளர்ப்பதோடு, திடமான மன வலிமையையும், சகோதர மனப்பான்மையையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கிட பெரிதும் உதவுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, விளையாட்டு வளர்ச்சிக்கென சிறப்பான விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்,*